C.P.No.92/2018
Date.18.12.2019
Witness: WW1 Thiru.K.Gokilavaradhan
சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியிடம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -

நான் B.Com படித்திருக்கிறேன். என் சொந்த ஊர் கோயமுத்தூர். நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் எப்போது வேலைக்கு சேர்ந்தேன் என்றால் April மாதம் 2007 ம் ஆண்டு சேர்ந்தேன், தேதி ஞாபகம் இல்லை. நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் என்ன வேலை செய்தேன் என்றால் வாடிக்கையாளர்களை சந்தித்து ஆர்டர் எடுக்கும் Marketing வேலை செய்தேன். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஆர்டர் எடுப்பது சம்பந்தமான முழு பணப்பரிவர்த்தனை பணிகளை நான் தான் செய்தேன் என்றால் அது தவறு. ஆர்டர் எடுத்த பிறகு பொருட்களை வாடிக்கையாளருக்கு Supply செய்யும்போது அந்த பொருளுக்கு வாடிக்கையாளர் கொடுக்கும் தொகையை எதிர்மனுதாரர் நிறுவனத்தின் பெயரில் உள்ள வங்கி கணக்கில் நான் டெபாசிட் செய்வேன் என்றால் சரிதான், சில சமயங்களில் தொகையை ரொக்கமாக எதிர்மனுதாரர் நிறுவன உரிமையாளர் வீட்டிற்கு சென்று நேரிலும் கொடுப்பேன். அவ்வாறு எத்தனை முறை நேரில் தொகை கொடுத்துள்ளேன் என்றால் அது ஞாபகம் இல்லை, காரணம் நான் 12 ஆண்டுகள் அந்த நிறுவனத்தில் பணி செய்தேன். EMN Shipping , STV Shipping கேள்விப்பட்டிருக்கிறேனா என்றால் கேள்விப்பட்டிருக்கிறேன். மேற்படி இரண்டு நிறுவனங்களையும் நடத்துவது யார் என்றால் எதிர்மனுதாரர் நிறுவன உரிமையாளர் திரு.ராஜகோபாலன்தான் நடத்துகிறார். EMN Shipping நிறுவனத்தின் உரிமையாளர் நான்தான் என்றால் நான் மட்டுமில்லை, ராஜகோபாலன் அவர்களும் என்னுடன் சேர்ந்து நடத்துகிறார். STV Shipping நிறுவனத்தை நானும் என் மனைவியும் பங்குதாரர்களாக இருந்து நடத்தி வருகிறோம் என்றால் ஆமாம், ஆனால் திரு.ராஜகோபாலன் அவர்கள் Tax பிரச்சனைகள் காரணமாக என்னை கேட்டுக்கொண்டதால் அவருக்கு தெரிந்து STV Shipping நிறுவனத்தை ஆரம்பித்தோம், அவரும் சேர்ந்துதான் இந்த நிறுவனத்தையும் நடத்துகிறார். இது சம்பந்தமாக

எனக்கும் திரு.ராஜகோபாலன் அவர்களுக்கும் இடையில் MOU உள்ளதா என்றால் இல்லை, நம்பிக்கையின் பேரில்தான் நடத்துகிறோம். EMN Shipping மற்றும் STV Shipping நிறுவனங்களுக்கும் எதிர்மனுதாரருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், நான் சொல்வதுபோல ராஜகோபாலன் மேற்படி நிறுவனங்களை ஆரம்பிக்கும்படி என்னிடம் கேட்கவில்லை என்றும் மேற்படி இரண்டு நிறுவனங்களையும் நான் தனிப்பட்ட முறையில் ஆரம்பித்து ராஜகோபாலன் அவர்களை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் நடத்தி வருகிறேன் என்றும் சொன்னால் அது பொய். இந்த விபரங்கள் தெரிந்தவுடன் ராஜகோபாலன் என்மீது சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் என்னை வேலையை விட்டு அனுப்பிய பிறகு நான் இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் அவர் என்மீது புகார் கொடுத்தார், காவல் துறையினர் என்னை விசாரித்து என்மீது தவறு இல்லை என்று கூறி அனுப்பிவிட்டார்கள். காவல் துறையினர் என்னை விசாரித்த போது நான் எதிர்மனுதாரருக்கு தொகை செட்டில் செய்துவிடுவதாக ஒப்புக்கொண்டுவிட்டு பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்துவிட்டேன் என்றால் அது பொய். எதிர்மனுதாரர் என்மீது கொடுத்த புகார் பற்றி நான் என் மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் அந்த புகாருக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்பதால் சொல்லவில்லை. எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை மேற்படி எனது இரண்டு நிறுவனங்களுக்கும் எடுத்துக்கொண்டு விட்டேன் என்றும் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் கணக்கில் ஒருசில தொகைகளை மட்டும் செலுத்திவிட்டு மீதித்தொகைகளை நான் எனது நிறுவனங்களுக்காக எடுத்துக்கொண்டேன் என்றும் சொன்னால் அது பொய். நான் இதுபோன்று மோசடி செய்த காரணத்தால்தான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் இருந்து என்னை வேலை நீக்கம் செய்துவிட்டார்கள் என்றால் அது பொய். எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு நான் இழப்பு ஏற்படுத்திய காரணத்தால்தான் எதிர்மனுதாரர் உரிய அறிவிப்பு கொடுத்து என்னை வேலை நீக்கம் செய்தார் என்றால் அது

பொய். எதிர்மனுதாரர் நிறுவன வங்கி கணக்கு போல போலி வங்கி கணக்கு தொடங்கியுள்ளேன் என்றால் அது பொய். அந்த போலி வங்கி கணக்கு மூலம் பல லட்சம் மோசடி செய்துள்ளேன் என்றால் அது பொய். மேற்படி இரண்டு நிறுவனங்களுக்கும் நான் எந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் எதிர்மனுதாரர் நிறுவனம் வங்கி கணக்கு வைத்துள்ள IDBI வங்கியில் அவர் கூறியபடி கணக்கு வைத்துள்ளேன். எனது நிறுவனத்தின் வங்கி கணக்கினை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தேவைப்படும் பட்சத்தில் தாக்கல் செய்கிறேன். எதிர்மனுதாரர் நிறுவனம் எனக்கு எந்த வகையிலும் தொகையோ incentive வோ வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)